DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SENDAMANGALAM

C.C.No.309/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | செல்லதுரை (Lw - 3) |
| Father / Husband Name | : | கலியமூர்த்தி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

Sworn by Bench Clerk J. Sham

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை Date : 08.08.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஊரக காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2025ம் ஆண்டு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 22.08.2025ம் தேதி நான் நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் நிலையம் அஜராகி கொடுத்த தனியறிக்கையின் பேரில் நிலைய குற்ற எண்.239/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், ஒரு நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் அன்றைய தினம் 12.45 மணிக்கு ஆஜர் எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி ஆகியோர் முன்னிலையில் மதியம் 13.00 மணிக்கு பதிவு செய்தேன்.

எதிரி தீரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு மதுபானத்தை விலைக்கு வாங்கி அதை அதிக விலைக்கு அங்கு வரும் நபர்களுக்கு விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த தலா 180 ML அளவுள்ள Express Brandy மதுபானம் 27 பாட்டில்கள் அஜர் செய்தார். அதை தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் மாலை 13.45 மணிக்கு கைப்பற்றினேன். எதிரியை அவர் வைத்திருந்த மதுபான பாட்டில்களுடன் தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் அவரது செல்போனில் புகைப்படம் எடுத்தார். பின்னர் கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை உதவி ஆணைவர் (கலால்) நாமக்கல், அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன்.

பின்னர் 28.08.2025 தேதி மாலை 16.00 மணிக்கு தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி ஆகியோருடன் சம்பவ இடம் சென்றேன்.அங்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. நாங்கள் விசாரித்த பொதுஜன நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். மேற்படி மதுபான பாட்டில்களை எதிரி சாக்குபையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலையில் மேற்படி பையை கைப்பற்றி காவல் ஆய்வாளர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தாரா என்றால் இல்லை வழக்கிற்கு தேவைப்படாததால் கைப்பற்றவில்லை. நானும் என்னுடன் வந்த அ.சா.1 சந்திரசேகரனும் எதிரியை காவல்நிலையம் அழைத்து சென்றோம் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்துதான் எதிரியிடம் இருந்து ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் பெற்றோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 புகைப்படம் காவல்நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்ததற்கு பின்னிட்டுதான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. ஆனால் அந்த விபரங்களை ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி

கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்களில் இருந்து ஆய்வுக்காக எங்கள் முன்னிலையில் மதுபானங்களை எடுத்து வைக்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பாட்டில்களை என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் யாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீதுபொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**